## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சத்தியமங்கலம், ஈரோடு மாவட்டம்.

## அசல் வழக்கு எண்.52/2024

2025 ம் ஆண்டு நவம்பர் மாதம் 14 ம் தேதி வாதி தரப்பு சாட்சியின் **வா.சா.1** ன் வாக்குமூலம் 1989 ம் ஆண்டு 19 வது விதி ஏற்பாட்டின்படி திருமதி. S. சுசீலா, பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சத்தியமங்கலம், என்பவரால் உறுதி பிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.இளங்கோவன் | வட்டம் | : | |
| த/பெ. | : | | மாவட்டம் | : | |
| க/பெ. | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | வயது | : | |

**வா.சா.1 : முதல் விசாரணை**:

நான் இவ்வழக்கின் வாதி ஆவேன். எனது முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள சங்கதிகளை உண்மையென நேரில் அறிந்து கையெழுத்து செய்துள்ளேன். 05.05.2015 ம் தேதியிட்ட வாதி மற்றும் பிரதிவாதி ஏற்படுத்திக் கொண்ட குத்தகை ஆவணம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ-1** ஆகவும், 12.07.2016 ம் தேதியிட்ட சத்தியமங்கலம், குற்றவியல் நடுவர் நீதிமன்றம் S.T.C.No.863/2016 வழக்கில் செலுத்தப்பட்ட அபராத இரசீது சான்றிட்ட நகல் **வா.சா.ஆ-2** ஆகவும், 21.05.2018 ம் தேதியிட்ட வாதியின் வழக்குரைஞர் அனுப்பிய அறிவிக்கை அலுவலக நகல் **வா.சா.ஆ.3** ஆகவும், 14.06.2018 ம் தேதியிட்ட பிரதிவாதி அனுப்பிய பதில் அறிக்கை அசல் **வா.சா.ஆ.4** ஆகவும், 28.12.2023 ம் தேதியிட்ட ரீ சர்வே எண்கள் 35/1A மற்றும் 34/1 ன் அடங்கல் உண்மை நகல் வா.சா.ஆ-5 ஆகவும், 04.01.2024 ம் தேதியிட்ட டவுன் சர்வே எண்கள்.14/6 நகர நில அளவைப் பதிவேடு இணையவழி நகல் **வா.சா.ஆ.6** ஆகவும், 04.01.2024 ம் தேதியிட்ட டவுன் சர்வே எண்கள்.20/1 நகர நில அளவைப் பதிவேடு இணையவழி நகல் **வா.சா.ஆ.7** ஆகவும், 28.04.1993 ம் தேதியிட்ட வாதியின் பெயரில் உள்ள கிரைய ஆவணம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.8** ஆகவும், 30.04.1993 ம் தேதியிட்ட வாதியின் பெயரில் உள்ள கிரைய ஆவணம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.9** ஆகவும், வாதியின் ஆதார் கார்டு நகல் அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது **வா.சா.ஆ-10** ஆக குறியீடு செய்யப்படுகிறது. தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**வாதி தரப்பு வேண்டுகோளுக்கிணங்க முதல் விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.**

Taken down by me in open Court read over and interpreted to the witness and acknowledged by him/her to be correct.

SELVAM SUSILA

Digitally signed by SELVAM SUSILA
Date: 2025.11.14 16:19:44 +0530

District Munsif